16th March 1964]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஏற்றுக்கொள்ளாததற்குக் காரணம் என்னவென்றால், அவ்வாறு ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்பது அரசாங்கத்தின் கருத்து.

* 283 *Q.*—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state the steps so far taken by the Government to see that the midday meals provided to the students is pure and does not contain poison?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have issued instructions that the Executive Committees of midday meal centres should make arrangements for preparation and service of meals in a hygienic manner. The public health staff in the blocks have been instructed to make surprise inspection of midday meal centres in order to ensure that the minimum necessary standards of hygiene are maintained in the centres. Detailed instructions have also been issued regarding the hygienic conditions under which curd should be prepared out of milk powder.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : மதிய உணவுக்காகக் கொடுக்கப்படுகிற ஒரு அணாவானது போதாமல் இருக்கிறது. அதிலும் இன்றைக்கு கண்டிராக்டர்கள் அளவையும் குறைத்து, குவாலிடியும் சரியாக இல்லாமல் இருக்கிறது. சுமார் 7 அல்லது 8 மணிக்கு முன்பே தயாரித்து விடுகிறார்கள். அம்மாதிரி நடக்காமல் இருப்பதற்கும், உணவின் தரத்தை உயர்த்துவதற்கும் அரசாங்கம் அதிகத் தொகை கொடுப்பதற்கு முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் தலைக்கு 6 ந. பை. கொடுக்கிறது. அதைத்தான் கனம் அங்கத்தினர் ஒரு அணா என்று குறிப்பிட்டார். மேலும் 4 ந.பை. சேர்த்து முன்பு எல்லாம் மக்களே அளித்துக்கொண்டு வந்தார்கள். 10 ந.பை. மதிப்புக்கு உணவு அளிக்க வேண்டுமென்பது நோக்கம். பால் பவுடர் வேறு விஷயம். பால் பவுடரைத் தயிராக்குவது "கேர்" ஸ்தாபனத்தினர் வினியோகிக்கும் முறைப்படி நடக்கிறது. 10 ந.பை. மதிப்புக்கு சாப்பாடு போடப்பட்டு வருகிறது. ஆனால் சில இடங்களிலே 4 ந.பை. வசூலிக்க முடியவில்லை. பஞ்சாயத்துக்கள் 2 ந.பைசாவும், மக்கள் 2 ந.பைசாவும் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறோம். ஆனால் சில இடங்களில் மக்கள் கொடுக்க முடியாமல் போகிறது. சில இடங்களில் பஞ்சாயத்துக்கள் கொடுக்க முடியாமல் போகிறது. அப்பொழுது குறைத்துக் கொடுக்கிறார்கள். 6 ந.பைசா அடிப்படையிலே பார்க்கும்பொழுது, இந்த வரவு செலவுத் திட்டத்திலே அங்கீகாரம் கோரியிருப்பது ரூ. 168 லட்சம், மூன்றில் ஒரு பங்கு பிள்ளைகளுக்குச் சாப்பாடு போடப்படுகிறது. அதற்கு மேல் அரசாங்கம் அதிகரிப்பதற்கு இல்லை. மக்கள் இதிலே அக்கறை எடுத்துக்கொண்டு, கொஞ்சம் தொகை வசூலிக்க முன் வந்தால், நல்ல சாப்பாடு போடலாம் என்பது அரசாங்கத்தின் கருத்து.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : முக்கியமாக இந்த உணவுப் பண்டங்கள் கெட்டுப் போய் அதனால் பிள்ளைகள் அதிகமாகப் பாதிக்கப்படுவதற்குக் காரணம் என்னவென்றால், இந்த "கேர்" ஸ்தாபனத்தினர் எவ்வளவு தான் நல்ல முறையில் அனுப்பித்தாலும் வந்து சேருகிற இடத்திலே பல மாதங்கள் தேங்கி விடுகிறது. பல இடங்களில் இப்படிச் சேதப்பட்ட பொருள்கள் வழங்கப்படுகின்றன. இதைக் கண்காணிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பிள்ளைகள் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்லுவது சரியல்ல. அப்போதைக்கப்போதுதான் வினியோகிக்கப்பட்டு வருகிறது. இது தொடர்ந்து அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. அரசாங்கம் உணவுப் பண்டங்கள் கெடாமல் பார்த்துக் கொள்வதற்கு தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது.

[16th March 1964

திரு. எம். எஸ். மணி : போன வாரத்தில் சென்னை நகரில் அளிக்கப்பட்ட மதிய உணவில் ஒரு பாம்புக்குட்டி இருந்ததாக நான் பத்திரிகையில் பார்த்தேன். இது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியானால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சில குழந்தைகளுக்கு மாத்திரம் மதிய உணவு அளித்து மற்றவர்களை வீட்டுக்கு அனுப்பிவிடுவதினால் ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் ஏற்படுகிறது. ஆகவே பணக்காரக் குழந்தைகள் இடமிருந்து அதிகமாகத் தொகை பெற்று, ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் இல்லாமல் எல்லோருக்கும் மதிய உணவு அளிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அத்தகைய உத்தேசம் இப்பொழுது இல்லை. மேலும் அது சாத்தியமும் இல்லை.

284 கேள்வி.—**திரு முனு ஆதி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளிகளில் மதிய உணவு வரவு-செலவுக் கணக்குகளைத் தணிக்கை செய்பவர் யார் ?

(இ) அவர்களைத் தவிர விசேஷ தணிக்கையாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்களா ?

(உ) அவர்கள் 1961–62, 1962–63 பள்ளி ஆண்டுகளில் எல்லாப் பள்ளிகளையும் பார்வையிட்டனரா ?

(எ) தணிக்கை மூலம் குறை காணப்பட்ட பள்ளிகள் எத்தனை இருந்தன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) At present the Deputy Inspectors of Schools scrutinise the accounts of the midday meal centres during their inspections and surprise visits.

(*b*) The Government have issued orders in September 1963 that the audit of accounts by the midday meal centres in Panchayat Union and non-Panchayat Union areas would be carried out by the Panchayat Extension Officers and the Examiner of Local Fund Accounts respectively. The audit will be carried out commencing from the School Year 1964–65.

(*c*) & (*d*) Do not arise in view of the reply to clause (*b*) of the question.

Execution of improvement works

* 285 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether it is a fact that the ban on the execution of works owing to national emergency has been lifted?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The hon. Member is obviously referring to building programmes. There was no general ban on building programmes. After the Emergency the Government reviewed all the building programmes and allowed all essential schemes, particularly those connected with the Plan to be proceeded with while deferring such of those building works the implementation of which was not considered to be so very urgent.

MR. SPEAKER : Questions are over.